**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06022021-4423

Volume: 6

Issue: 2

Month: October

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 05.05.2021

Accepted: 03.06.2021

Published: 01.10.2021

Citation:
Parimalam, V. "Existence in Natrinai and the Cause of Existence." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 2, 2021, pp. 158–62.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i2.4423

*Corresponding Author:
gvelu506@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Existence in Natrinai and the Cause of Existence

**Dr. V. Parimalam**

*Assistant Professor, Department of Tamil Literature*

*Nallamuthukkaundar Mahalingam College, Pollachi, Tamil Nadu, India*

https://orcid.org/0000-0002-5955-3801

**Abstract -** The Tamils divided the department on the basis of land. They are Kurinji, Mullai, Marutham, Neithal, and Palai. But according to the Tamil tradition there is no private land called Balai. Kurinji and Mullai change from their nature and get the character of Palai. Silapathigaram says,

"Mullaiyum Kurinjiyum muraimaiindri thirinthu
Nalliyalbu Elanthu Nadungu thuyaruruthu
Palai enbathor padivam kollum" Kadu Kaan Kaathai (64-66)

Land discrimination is intertwined with the way people live, as well as their habitat, animals, and food. The department was the moral of their land, united with the environment. When it says Internal means its 'Agavozhukam', when it says external means it is 'Puravozhukam'. The quintessential discrimination is found only in the anthologies. Based on them, first, the nucleus and the adjectives are divided.

**Keywords:** Natrinai, Nilam, Deivam, Agappadalgal, Uripporutkal, Thokappiyam.

**References**

1. Balasubramanian, K.V. (2019). *Tolkappiyam*, Ambattur Chennai, New Century Book House Pvt., First Edition
2. Balasubramanian, K.V. (2007). *Natrinai*. Chennai, New Century Book House Pvt., Ambattur, Third Edition
3. (2011). *Silappathikaram*. Sharda Pathipagam, Chennai, Second Edition

# நற்றிணையில் இருத்தலும் இருத்தல் நிமித்தமும்

***முனைவர் வெ. பரிமளம்***
உதவிப் பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, தமிழ் நாடு, இந்தியா

***ஆய்வுச் சுருக்கம்***

*தமிழர்கள் நிலத்தை அடிப்படையாகக் கொண்டே திணையை வகுத்திருந்தனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பவையாகும். ஆனால் தமிழ் மரபின்படி பாலை என்று தனியோர் நிலம் இல்லை. குறிஞ்சியும் முல்லையும் தன் இயல்பில் இருந்து மாறி பாலை என்னும் தன்மையைப் பெறும் இதைச் சிலப்பதிகாரம்*

***"முல்லையும் குறிஞ்சியும் முறைமையினிற் திரிந்து***
***நல்லியல்பு இழந்து நடுங்குத் துயர்உறுத்துப்***
***பாலை என்பதோர் படிவம் கொள்ளும்" காடு காண் காதை (64-66)***

*என்கிறது. இந்நிலப் பாகுபாடு மக்கள் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்த ஒன்றாகவே இருந்ததை அவர்கள் வாழும் இடம், விலங்குகள், உணவு போன்றவற்றை வைத்து அறிந்து கொள்ளமுடிகிறது. சூழலோடு ஒன்றிய அவர்களின் நிலத்திற்குரிய ஒழுக்கமே திணை எனப்பட்டது. அகத்தைக் கூறுவது அகவொழுக்கம், புறத்தைக் கூறுவது புறஒழுக்கம். ஐந்திணைப் பாகுபாடு அகநூல்களில் மட்டுமே காணப்படுகிறது. அவற்றை அடிப்படையாகக் கொண்டே முதல், கரு, உரிப்பொருட்கள் வகுக்கப்படுகின்றன.*

***முக்கியச்சொற்கள்:*** *நற்றிணை, நிலம், தெய்வம், அகப்பாடல்கள், உரிப்பொருட்கள், தொல்காப்பியம்*

## உரிப்பொருள்

நிலமும் பொழுதும் முதற்பொழுதாகும் தெய்வம் உள்ளிட்ட மக்களுக்கு பயன்பாடு உள்ளவை கருப்பொருட்கள் ஆகும். இவையே அகப்பாடல்களில் பின்புலமாக அமையும். உரிப்பொருள் என்பது அந்நிலத்து மக்களுடைய மனஉணர்வுகளுக்குக்காரணமாக உள்ளத்தே எழுகின்ற உணர்வுகள் தான் உரிப்பொருளாகும். புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் என்னும் உரிப்பொருட்கள் நிலத்தின் தன்மைகேற்ப அவை பகுக்கப்பட்டுள்ளது. முதற்பொருளும், கருப்பொருளும் மயங்கும். ஆனால் கருப்பொருட்கள் திணைமயக்கம் பெறா. இதை,

**உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே**
**(அகத்திணையியல் நூற்பா - 13)**

என்கிறது தொல்காப்பியம்

## முல்லைநில உரிப்பொருள்

முல்லை நிலத்திற்குரிய உரிப்பொருள் இருத்தலும் இருத்தல் நிமித்தமும் ஆகும். தொல்காப்பியர்

**புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**
**ஊடல் இவற்றின் நிமித்தம் என்று இவை**

தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே (அகத்திணையியல் நூற்பா-14) என்கிறார். இருத்தலைப் பற்றி நச்சினார்க்கினியர் "இனித் தலைவி பிரிவுணர்த்திய வழிப் பிரியார் என்றிருத்தல், பிரித்துழிக் குறித்த பருவம் அன்றென்று தானே கூறுதல் பருவம் வருத்துணையும் ஆற்றியிருந்தமை பின்னர்க் கூறுவன ஆகியவை இருத்தல்" என்று கூறுவர்.

தொல்காப்பியர் பொதுவான கருப்பொருளைக் கூறுகிறாரேயன்றி இவைஇவை இத்திணைகளுக்கு உரியவை என்று கூறவில்லை. உரையாசிரியர்களே அவ்வாறு பகுத்துள்ளனர். மனித இனத்தின் நாகரிகம் வளர்ந்து ஆடு, மாடு மேய்ப்பு, சொத்துரிமை ஒருவரைத் தலைவராகக் கொண்டமை, ஆநிரைக் கவர்தல் போன்றவை முல்லைநிலத்திலே தோன்றி வளர்ந்ததாகும். தமிழ் மொழி போன்றே கிரேக்கம், லத்தீன், வடமொழி போன்றவற்றில் முல்லைப் பாடல்கள் உள்ளன. இந்திய நாகரிக வளர்ச்சிக்கு அவை வித்திட்டன என்றே கூறலாம்.

### முல்லை நிலம்

முல்லை நிலம் காடும் காடு சார்ந்த பகுதியாகும். முல்லை நிலம்

**மாயோன் மேய காடுறை உலகமும்**

**(தொல் பொருள் அகத்திணையியல், நூற்பா 5)**

என்று கூறப்படும். இவர்களின் தொழில் ஆநிரை மேய்த்தல். மழை பொழிவு குறையும் காலங்களில் ஆநிரைகளை மேய்ச்சல் நிலங்களை நோக்கி ஓட்டிச்செல்வர். இன்றும் அது வழக்கில் இருந்து வருகிறது. அவ்வாறு செல்லும் போது ஆண்கள் மட்டுமே செல்வர். மழைபொழிந்தவுடன் அவர்கள் திரும்பி வரும்வரை இல்லறக்கடமைகளை ஆற்றிக் கொண்டு பெண்கள் காத்திருக்க வேண்டும். அவ்வழக்கம் நாகரிகம் அடைந்த காலகட்டத்தில் பொருள் தேடுதல் காரணமாகவோ போர் மற்றும் கல்வி, தூது காரணமாகவோ பிரிவும் நேரும் போதும் பெண்கள் காத்து இருந்திருக்கின்றனர். கார்மழை பொழிந்து நிலம் செழித்தவுடன் இடையர்கள் திரும்பி வருவதன் எச்சமே கார்காலம் முடிந்து தலைவன் திரும்பி வருவதாக முகிழ்திருக்க வேண்டும்.

### ஆற்றியிருத்தல்

ஆற்றியிருத்தல் என்பதற்கு தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றால் அவன் திரும்பி வரும்வரை ஆறுதலோடு இருத்தல், இல்லறக்கடமைகளை தவறாது செய்தல் என்று இரண்டு பொருள் உண்டு. பெண்கள் தன் கணவனுக்காக காத்திருப்பதால் தான் நிலத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் கற்பு "முல்லை சான்ற கற்பு" எனப்பட்டது. தலைவி தலைவன் மீது கொண்ட அன்பு காரணமாக தலைவன் வரும் வரை ஆற்றியிருக்கிறாள்.. இதை

**"அன்பு கலந்து**

**நம் வயின் புரிந்த கொள்கையோடு"**

**(நற்றிணை பா.எண் 59:6-7)**

என்னும் தலைவனின் கூற்றானது தலைவன் அன்பு மிகுதியால் காத்துக்கொண்டிருப்பதையே வெளிப்படுத்துகிறது.

### இயற்கையைக் காட்டி கூறுதல்

வினைமுடிந்து வரும் தலைவன் தலைவியைச் சந்திக்கப் போகும் தன் விருப்பத்தை பெரும்பாலும் வெளிப்படையாகக் கூறுவதில்லை. தான் வரும் வழியில் வாழும் உயிரினங்களின் அன்புவாழ்க்கை வழியாக எடுத்துக்காட்டுகிறான். இதை, கானக்கோழியானது மழைபெய்து நீர் வடிந்த காட்டில் நாங்கூழ்ப் புழுவைக் கவரும் அப்புழுவைக் கொன்று தன் பெடைக்கு ஊட்ட வேண்டிப் பெருமையோடு அப்பெடையை நோக்கும் நிலையைக் காண்பாயாக என்று தேர்ப்பாகனிடம் கூறுகின்றான். (பா.எ.321) மேலும் இரவு நேரத்தில் விருந்து வந்தாலும் உவந்தும் போகும் தலைவி அவள் என் சொல் கேட்டு இல்லிருந்து நல்லறம் செய்யும் கற்பினையும் மென்மையான இளமையினையும் உடையவள் (பா.எண்:142). சேவல் மழையிலே நனைந்து அஞ்சிப் புறத்தே ஒதுங்கியிருந்தது. அதனைக் கண்ட பேடை நீள நினைத்து பார்த்துத் ஈர நெஞ்சினையுடையதாய் சேவலைத்

தன்னிடம் வருமாறு அழைத்தது. (பா.எண்:181) போன்றவை எடுத்துக்காட்டுக்களாய் அமைந்தன. தலைவி தனக்காக காத்திருக்கிறாள் என்ற எண்ணம் இருந்தாலும் அதை நேரிடையாக தேர்ப்பாகனிடம் வெளிப்படுத்தாத தன்மையும் காணப்படுகிறது.

**களவு வாழ்வில் ஆற்றியிருத்தல்**

தலைவன் பொருளீட்டவோ, போர் காரணமாகவோ பிரிந்துசெல்லுதல் இயல்பான ஒன்று. கற்பு வாழ்வில் இருக்கும் தலைவிக்கு ஆற்றியிருத்தல் என்பது இயல்பான ஒன்று. ஆனால் களவு வாழ்வில் தலைவி ஆற்றியிருத்தல் என்பது கடினமான ஒன்று. அன்னை உள்ளிட்டோரின் சினத்தையும் தாண்டி அவள் ஆற்றியிருக்கவேண்டும். நற்றிணையில் ஒரு பாடலில் மட்டுமே களவு வாழ்க்கையில் ஆற்றியிருப்பதை பற்றிய செய்தி காணப்படுகிறது.

**தலைவன் மீது நம்பிக்கை**

தலைவி, வினைமேற்செல்லும் போது தலைவனை திரும்பி வரும் காலம் குறித்து வினவுவது என்பது இயல்பான ஒன்று. அதற்குத் தலைவன் மிக்க மழையுடையது மான கார்ப்பருவத்தில் திரும்ப வருவதாகக் கூறி அதுவரை ஆற்றியிருக்குமாறு கூறிப் பிரிந்து செல்கிறான். கார்காலம் தொடங்கி விட்டது. பிடவமும் கொன்றையும் காந்தளும் மற்ற மலர்களும் மலர்ந்தன. ஆனால் தலைவன் வரவில்லை, ஆகையால் தலைவி கார்காலம் அதற்குரிய பருவத்தில் வரலாமல் முன்னரே வந்து விட்டதாக குறை கூறுகிறாள். ஆனால் தலைவன் மீது எந்த குறையும் கூறவில்லை. இந்நிலமானது தன் இருப்பில் இருந்து பெயர்வதாக இருந்தாலும் தன் சொல்லிலிருந்து வழுவ மாட்டார் என்கிறாள் (நற்.பா.298). தலைவன் குறித்த காலத்தில் வரத்தவறியபோதும் தலைவி தலைவன் மீதான நம்பிக்கையைக் கைவிடவில்லை.

**போர்வயிற்பிரிவு**

தலைவன் போர் காரணமாகப் பிரிந்து செல்லுதல் இயல்பு. போர்வயிற்பிரிவு முடிந்து தலைவன் வரவை

> **"உறுபகை தணித்தனன் உரவு வாள் வேந்தே" (நற்.பா.10)**

என்று கூறுகிறது. அரசன் போரில் வெற்றி பெற்று விட்டான் என்ற கருத்து வெளிப்படுகிறது. இதனால் தலைவன் விரைவில் திரும்பி வருவான் என்ற கருத்து பெறப்படுகிறது.

**தலைவன் திரும்பி வராத நிலை**

பொருள்வயிற் பிரிவு மேற்கொள்ளும் தலைவன் கார்காலம் வந்தபோதும் வரவில்லை. தலைவி ஆற்றியிருந்தாலும் அவளின் துயர் அளப்பரியதாகும். அவளைத் துன்புறத்தும் காரணிகளாக பல அமைகின்றன. அவற்றில் ஒன்று புலம்பிக் கூவும் குயில். குயிலை விடக்கொடியது ஆறு. அதை விட கொடியது குருகத்தி விற்கும் பெண் என்று பலவாறு புலம்பி தன் துயரை ஆற்றிக்கொள்கிறாள். மேலும் தன்னை துன்புறுத்தும் வாடைக்காற்று தலைவன் வந்தபின் தன்னை ஒன்றும் செய்யாது என்கிறாள். பரத்தையர் வீட்டிற்கு சென்ற போது தலைவனை ஏற்றுக்கொள்ளாத தலைவி வினைமேற்சென்ற தலைவன் திரும்பி வரும்போது அவனை ஏற்றுக்கொள்கிறாள். இதனால் ஒழுக்கம் என்பது உயர்வானதாக இருந்திருப்பதையும் பொருளீட்ட தலைவன் செல்லும்போது பிரிந்திருப்பது ஆற்றியிருத்தல் இயல்பான நிகழ்வேயாகும்.

பொருள்வயிற் பிரிந்து சென்ற தலைவன் கார்பருவம் தொடங்கி முல்லை மலர்கள், காந்தள் மலர்கள் மலர்ந்த பின்னும் வரவில்லை. அதைப் பற்றி தலைவி தலைவர் சென்ற நாட்டில் பறவைகளும் விலங்குகளும் தத்தம் இணையுடன் இருக்கும் காட்சி

தலைவன் நாட்டில் அவன் கண்களில் படவில்லையா அப்படி அவை கண்களில் பட்டிருந்தால் தலைவன் வினைமுடிந்து திரும்பி இருப்பான் என்று அவன் வராத வருத்தத்தை வெளிப்படுத்துகிறாள். தலைவி ஆற்றியிருப்பாள் என்று கருதிய தலைமகன் வினைமுடிந்து கார்காலம் தொடங்கும் முன் திரும்பி வந்து தலைவியுடன் வாழ்ந்தமையும் (நற்.பா.139) காணப்படுகிறது. தலைவன் இல்லாத காலத்திலும் விருந்தினரை வரவேற்கும் பான்மையை தலைவி பெற்றிருந்தாள்.

தலைவி தலைவனைச் சார்ந்திருக்கும் நிலைதான் ஆற்றியிருத்தல் என்றும் பெண் ஆணைச் சார்ந்து வாழ தகவமைப்பட்டு இருக்கிறார் என்றும் ஆற்றியிருத்தலை ஒரு சிலர் கருதுவர். ஆனால் ஆற்றியிருத்தல் என்பது காத்திருத்தல் என்றே கருத இடமுள்ளது உள்ளது சிதைப்போர் உளர் எனப்படார் என்பதற்கேற்ப பொருள் தேடச்செல்லும் தலைவன் காலம், சூழ்நிலை ஆகியவற்றைக் கருதி தலைவியை அழைத்துச் செல்ல இயலாமல் இருந்திருக்கலாம். அல்லது தன் இல்லறக் கடமையைப் பொறுப்பேற்றுச்செய்ய தலைவியை தன் துணைவி என்ற கருத்தில் விட்டுச் சென்றிருக்கலாம். கார்காலம் என்பது தலைவன் வரும் காலத்திற்குரிய குறியீடே தவிர எல்லா ஆற்றியிருத்தலும் கார்காலத்தில் தான் முற்றுப்பெற்றிருக்கும் என்று கூற இயலாது. ஆற்றியிருத்தல் என்பது தலைவன் மீது கொண்ட அன்பால் தலைவி தன் இல்லறக் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றி கொண்டு குடும்பப் பொறுப்புக்களைக் கவனித்துக் கொண்டு தலைவனுக்கு காத்திருத்தல் என்பது புலனாகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. கு.வெ.பாலசுப்பிரமணியன். (2019). *தொல்காப்பியம்.* அம்பத்தூர், சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிமிடெட், முதற்பதிப்பு - ஏப்ரல்
2. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உரையாசிரியர்). நற்றிணை. அம்பத்தூர் சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிமிடெட், மூன்றாம் பதிப்பு
3. (2011). *சிலப்பதிகாரம்.* சாரதா பதிப்பகம் சென்னை, இரண்டாம் பதிப்பு.